
# ஆத்திகனுக்கு



# அகப்படாதவன்

மைதிலி தயாபரன்

# ஆத்திகளுக்கு அகப்படாதவன்

(கவிதைத் தொகுப்பு)

# ஆத்திகளுக்கு அகப்படாதவள்

(கவிதைத் தொகுப்பு)

- மைதிலி தயாபரன் -

**வெளியீடு:**
வெளியீட்டு இல.07
கிருஷ்ணிகா வெளியீட்டகம்
வேப்பங்குளம், வவுனியா

# ஆத்திகனுக்கு அகப்படாதவன்
(கவிதைத்தொகுப்பு)

எழுதியவர் : மைதிலி தயாபரன்
தொலைபேசி : 0770178014
மின்னஞ்சல் : maithilieet@yahoo.com
பதிப்புரிமை : எழுத்தாளருக்கே
வெளியீடு : கிருஷ்ணிகா வெளியீட்டகம், வவுனியா.
முதற் பதிப்பு : 15-12-2016
அட்டை வடிவமைப்பு : கந்தையா கோபிலராஜ்
அச்சுப் பதிப்பு : வாணி கணனிப் பதிப்பகம்
விலை : ரூபா 200

# ATHTHIKANUKKU AKAPPADAATHAVAN
(Poem Collection)

Author : Maithiliee Thayaparan
Telephone : 0770178014
E- mail : maithilieet@yahoo.com
Copy Rights : For Author
Publication : Kirushniga Publications, Vavuniya
First Edition : 15-12-2016
Cover Design : Kandaiah Kobilaraj
Printers : Vaani Computer Printing Centre
Price : Rs. 200

ISBN : 978- 955- 41614- 9- 8

# வெளியீட்டுரை

எமது வெளியீட்டகத்தால் வெளியிடப்படும் ஏழாவது புத்தகமும் மூன்றாவது கவிதைத் தொகுப்பும் இதுவாகும். "ஆத்திகனுக்கு அகப்படாதவன்" என்ற இந்நூலை இந்த வருடத்தின் எமது வெளியீட்டகத்தின் முதலாவது கவிதைத் தொகுப்பாக வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கடந்த வருடத்தில் திருமதி மைதிலி தயாபரனின் நான்கு புத்தகங்களை வெளியிட்டிருந்தோம். "சீதைக்கோர் இராமன் (மரபுக் கவிதை)", "அநாதை எனப்படுவோன் (நாவல்)", "தவறுகள் தொடர்கின்றன (கவிதை)" என்பவற்றுடன் "வீடுகளில் மின்சக்தி விரயமாதலைக் குறைப்போம்" என்ற சக்திப் பயன்பாட்டுக்கு உறுதுணையாகும் கட்டுரைத் தொகுப்பையும் கடந்த வருடத்தில் வெளியிட்டிருந்தோம். தொடர்ந்தும் இந்த வருடமும் அவருடைய புத்தகங்களை வெளியிடுவது குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடம் வெளியிடப்பட்ட அவரின் நான்கு நூல்களில் இரு நூல்களுக்கு விருது கிடைத்திருந்தது. "சீதைக்கோர் இராமன்" என்ற அவரின் கவிதைத் தொகுப்பிற்கு வட மாகாண சிறந்த மரபுக் கவிதைக்கான விருதும் "அநாதை எனப்படுவோன்" என்ற அவரது நாவலுக்கு வவுனியூர் இரா உதயணன் அவர்களின் சிறந்த இளம் படைப்பாளிக்குரிய விருதும் கிடைத்திருந்தது. நாம் சேவையைத் தொடங்கிய முதலாவது வருடத்திலேயே இரு நூல்களுக்கான விருதைப் பெற்றிருந்ததும் அதிலும் கவிதைத் தொகுப்பும் அடங்கியிருந்ததும் எமக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

இந்த வருடத்திலும் அவருடைய "பாதம் காட்டும் பாதை" என்னும் சிறுகதை மற்றும் "என் செல்வ மகளே" என்ற நாவலுடன் இக் கவிதைத் தொகுப்பையும் வெளியிடுகின்றோம். மைதிலி தயாபரன் அவர்கள் தொடர்ந்தும் பல நூல்களைத் தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டு அவரை வாழ்த்தி நிற்கின்றோம்.

உரிமையாளர்
**கிருஷ்ணிகா வெளியீட்டகம்**
வேப்பங்குளம், வவுனியா.

# என்னுரை

எனது இலக்கியப் பயணத்தில் பத்தாவது புத்தகமும், நான்காவது கவிதைத் தொகுப்பும் இதுவாகும். 2014 இல் "விஞ்சிடுமோ விஞ்ஞானம்" என்ற புத்தகத்துடன் 2015 இல் "சீதைக்கோர் இராமன்" மற்றும் "தவறுகள் தொடர்கின்றன" என்னும் இரு கவிதை நூல்களை வெளியிட்டிருந்தேன்.

கடந்த வருடத்தில் வெளியிடப்பட்ட "சீதைக்கோர் இராமன்" என்ற எனது கவிதைத் தொகுப்பிற்கு வட மாகாண சிறந்த மரபுக் கவிதைக்கான விருது கிடைத்திருந்தது. இம்முறையும் கவிதை ஒன்றைத் தரவேண்டும் என்ற ஆவலில் எழுந்ததே இந்தப் புத்தகமாகும்.

கவிதைகள் மிகவும் எளிமையான இலக்கிய வடிவங்களாக இந்நாட்களிற் கருதப்படுவதால் படைப்பாளிகள் தங்களது கன்னி முயற்சியில் கவிதைகளை வெளியிடுவதில் முனைப்பாக இருக்கின்றார்கள். இருப்பினும் கவிதைக்கு ஒரு சீரான வடிவத்தை வழங்கவேண்டும் என்ற ஆதங்கத்தில் பல அனுபவம் மிக்க கவிஞர்கள் பற்பல உத்திகளையும் புகுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கடவுள் இருக்கிறார் என்று நம்புவனை ஆத்திகன் என்று சொல்வார்கள். அதாவது தங்களுக்கு மேலாக ஒரு சக்தி இருந்து உலகத்தை ஆட்டுவித்துக் கொண்டிருக்கின்றது என்பதைத் தெளிவாக நம்புபவர்கள் இவர்கள். இவர்கள் கடவுளை உணர்ந்து கொண்டார்கள். கடவுளை வடிவமைத்தவர்கள். கடவுளின் தொழிற்பாடுகளைச் சொல்லியிருந்தவர்கள். ஆனாலும் அவர்களிடமும் அகப்பட்டுக் கொள்ளாமல்..... செயல்கள் அமைந்திருக்கின்றன. அவற்றுக்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ளாமலே குழப்பத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் ஆத்திகர்கள்.

கடவுளைப் பற்றிய விடயங்கள் ஆன்மீகம் என்னும் கடலுக்குள் பொதிந்து கிடக்கின்றன. அவற்றில் இருந்து சரியான கொள்கைகளைத் தெரிந்து எடுத்து மக்களுக்குச் சொல்வதற்கு ஆன்மீக வாதிகள் பெரும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால் கடவுள் என்ற விடயத்தில் ஏற்படும் தெளிவின்மையும், கடவுளுக்குப் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்ளும் குருவானவர்களிடம் இருக்கும் நம்பிக்கையின்மையும் மதங்கள் பலவற்றின் தோற்றத்திற்குக் காரணமாக அமைந்தன.

ஆனாலும் அனைத்து மதங்களினதும் அடிப்படைக் கொள்கைகள் ஒன்றாகவே அமைந்திருக்கின்றன. இறைவனைப் பூமாலைகளால் அர்ச்சிப்பதும் நித்தலும் கோயிலுக்குட் புகுந்து வழிபாடு செய்வதும் நாம் செய்யும் வினைகளுக்கு விளைவாகும் பயனுக்காக ஆண்டவனை வேண்டிக் கொள்வதும், நன்மைக்கும் தீமைக்கும் நடப்பிற்கும் இறைவனை ஜவாப்தாரி ஆக்குவதும் எம்மில் பலர் செய்து கொண்டிருக்கின்றோம். இருப்பினும் இவையெல்லாம் ஆத்திகனுக்கு இயல்பாகவே எழும் ஆதங்கமே. இறைவனுடைய படைப்பாகத் தன்னை முற்றுமுழுதும் எண்ணுவதாலேயே அவர்களுக்கு இவ்வாறு எண்ணம் வருகின்றது.

மானுடப்பிறவி ஏனைய உயிரினங்களை விடவும் உயர்வானது என்றும் மக்களுடைய நல்வாழ்வும் மற்றையவர்களைக் காயப்படுத்தாத செயல்களுமே உன்னதம் என்பதும் அனைத்து மதங்களும் வலியுறுத்தும் பொதுவான விடயங்கள் ஆகும். மரணத்திற்குப் பின்பாகவும் தொடரும் பிறவிகளைப் பற்றி இந்து மதமும் பௌத்த மதமும் தெளிவாகச் சொல்லும்போது ஏனைய மதங்கள், மரணம் என்பது ஆன்மாவின் முடிவல்ல என்பதைக் குறிப்பாகச் சொல்லி நிற்கின்றன.

நல்லவற்றைச் செய்வதனால் இவ்வுலகில் நன்மையை அனுபவித்து வாழலாம் என்பதை மதங்கள் சொல்லும்போது, சுவர்க்கம், நரகம் என்ற இரண்டைச் சொல்லி நன்மை செய்தவன் சுவர்க்கத்திற்கும் அல்லாதது செய்பவன் நரகத்திற்கும் செல்வான் என்பதை இந்து மதம் அறிவுறுத்து கின்றது. அதாவது மானுட சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களை ஊகித்தறிந்த பகுத்தறிவு, மனிதன் வாழ்தற்கு ஏதுவான விடயங்களை இறைவனே நேரில் வந்து எழுதி வைத்ததாகச் சொல்கின்றது. இவற்றின் அடிப்படையில் எழுந்ததே ஆன்மீக நூல்கள், புராணங்கள் அனைத்தும். இருப்பினும் சட்டங்கள், கலைகள், முகாமைத்துவம் அனைத்தும் இவற்றின் வழுவல்களாக அமைந்தவையே

என்னதான் இம்மை, மறுமை என்று பலவற்றைச் சொல்லியபோதும் எந்த ஒரு மதமும் மானுடப்பிறவியின் மகத்துவத்தைச் சொல்கின்றது. மனிதனுக்கு விசேடமாக வழங்கப்பட்ட பகுத்தறிவு அவனின் நல்வாழ்வுக்கு உபயோகப்பட வேண்டும் என்றும் அவன் தன்னுடைய அறிவைக் கொண்டு உலகத்தை சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும் என்றும் வாழ்க்கையின் உயர்பட்ச இலக்கு இறைவனை அடைவது என்பதையும் சொல்கின்றது.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்**
**வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

என்ற திருக்குறள் மூலமாக நல்வினைகளைச் செய்பவன் இப் பூமியில் நன்றாக வாழ்வதுடன் தெய்வத்துக்கு அருகில் வைக்கப்படுவான் என்றும் சொல்லப்படுகின்றது. ஆக உடலுக்கும் மனதுக்கும் சுமையில்லாத இடத்தை அடைவதற்கு நாம் நல்லவற்றைச் செய்தற்குப் பழகிக் கொள்ளவேண்டிய இடம் இப்புவி என்பது புலனாகின்றது.

மனிதனின் பகுத்தறிவு பல நடப்புகளுக்குக் காரணங்களைச் சொல்ல முடியாது ஆகுமிடத்து அவன் ஆத்திகனாகவும், காரணங்களை ஊகித்தறியும்போது அவன் நாத்திகனாகவும் பொதுவில் ஆகிவிடுகின்றான். ஆனால் முற்றுமுழுதாகத் தேடும்போது அவன் மறுபடியும் ஆத்திகள் ஆகிவிடுவான் என்பது மட்டுமல்ல, தனக்கு அகப்படாதவனைத் தேட வேண்டிய இடம் தன்னுடைய உள்ளமே என்பதையும் கண்டுபிடித்து விடுவான்.

எனது இந்தத் தொகுப்பில் தேவார வரிகளைக் கொண்டு தொடங்கியிருந்தாலும் அனைத்து மதங்களுக்கும் பொதுவான விடயங்களையே குறிப்பிட்டிருக்கின்றேன். அனைத்தும் உள்ள இவ்வுலகில் தத்தமக்கு ஒதுக்கப்பட்டவற்றை மட்டுமே ஒவ்வொருவரும் அனுபவிப்பார்கள் என்பதைப் புரிந்து கொள்ளாத மனித மனது, கண்ணால் காணும் ஒவ்வொன்றையும் தேடி ஓடுவதையும் கையாலே அள்ள முடியாதபோது கானல் நீரென்று சொல்வதையும், தன்னுடைய நிலைமையை மற்றவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதையும் நிறுத்தி விடுவதில்லை. இதன்போது பாரபட்சம் நடந்ததாக உணர்ந்து கொள்ளும் அவர்களின் பகுத்தறிவு உரிமையுடன் கடவுளைக் கேள்வி கேட்பதற்கு முனைகின்றது.

மனிதனுக்கு ஒரு வினா உதித்தால் அதற்குப் பதிலளிக்க வேண்டியிருப்பவன் இறைவனே. ஆனால் மனிதனின் பகுத்தறிவு அதைப் பலவாறும் ஆய்வு செய்து கண்டுபிடித்து விடுகின்றது. இதற்கு முக்கியமாகப் பங்களிப்புச் செய்பவை அனுபவங்கள். அவற்றின் மூலம் தங்களின் சக்தியை மீறிப் போகும் விடயங்களை எதையோ சகித்துக் கொள்வதைப் போன்று மனிதன் ஏற்றுக் கொள்வான்.

ஆண்டவனுக்கும் மனிதனுக்கும் இடையிலான உரையாடலைப் போன்று இந்தக் கவிதையை வடிவமைத்தேன். மனிதனின் நுட்பமான கேள்விகளுக்கு மதங்கள் சொல்லும் நியாயமான காரணங்களை வெவ்வேறு கவி வடிவத்தில் தந்திருக்கிறேன். ஆழமாக அவற்றை வாசிக்கும்போது கேள்விகள் மேலும் எழுவதற்கு சந்தர்ப்பங்கள் நிறைய உள்ளன.

நான் இன்னும் ஆத்திகனாக இருப்பதால் என்னைப் படைத்தவனிடம் உரிமையோடு கேட்கின்றேன். என்னைத் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடும் அவனுக்கு இருப்பதாகச் சொல்கின்றேன். என்னை ஆற்றுப்படுத்துவதற்கு இயலுமானவனும் அவனே என்று வலியுறுத்துகிறேன்.

இறைவனைப் பற்றிய கொள்கைகள் என்றும் தெளிவில்லாததாய் மானுடர்க்கு இருப்பதனால், இதை வாசிக்கும்போது ஏற்படும் குழப்பங்கள், முரண்பாடுகள், தெளிவின்மைகள் அனைத்தையும் எதிர்கொள்ளுவதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று சொல்லி இந்த படைப்பை வாசகர்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.

தொடர்ந்தும் தேடலுடன் .......

**மைதிலி தயாபரன்**
15-12-2016

## பொருளடக்கம்


| | |
|---|---|
| பூமாலை புனைந்தேத்திப் | 13 |
| புலர்வதன் முன் | 14 |
| நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு | 16 |
| உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம் | 18 |
| நிலைபெறுமாறு எண்ணுதியேல் | 20 |
| முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை | 22 |
| ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே | 24 |
| உலகிற்கொருவனாய் நின்றான் | 26 |
| தேச விளக்கெலாம் ஆனாய் நீயே | 28 |
| மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் | 30 |
| ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன் | 32 |
| எங்கெழுந்தருளுவது இனியே | 34 |
| நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு நல்லன் | 36 |
| நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு | 38 |
| கண்ணும் கருத்தும் நிறைந்தாய் | 40 |
| குருவாய் வருவாய் அருள்வாய் | 44 |
| எத்தால் மறவாதே நினைக்கின்றேன் | 46 |
| ஈவதொன்றெமக்கு இல்லையேல் | 48 |
| கள்ளப் புலனைந்தும் காள மணிவிளக்கே | 50 |
| இமைப்பொழுதும் எந்நெஞ்சில் நீங்காதான் | 52 |
| அங்கையுள் அனலும் வைத்தாய் | 54 |
| அடியார்தங்கள் அல்லல் சொன்னக்கால் | 56 |
| எந்தை நீயென நமன்றமர் நலியின் | 58 |
| மூர்க்கரொடு முயல்வேனை | 60 |
| அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே | 64 |
| ஆளிலை எம்பெருமான் | 66 |
| அதுவோ உனதின்னருள் | 68 |
| ஆராத இன்பம் அருளும் மலை | 70 |
| தொழுவார்க்கொரு தீங்கில்லையே | 72 |
| இன்பநிலை தானே வந்தெய்தும் | 74 |
| எண்ணும் பொழுது எளிது எய்த | 76 |
| நேயத்தே நின்ற நிமலன் | 78 |
| இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே | 80 |

# பூமாலை புனைந்தேத்திப்

பூக்கள்
கரமெடுத்தால்
பூக்களிற் பலவிதம்
பூத்திருக்க மனங்குளிரும்
பொன் போன்று வர்ணத்தை
பொத்தி எடுத்த அம்மலரிற்
பொன்மேனியானுக்கு
போடுதற்கு மாலை

அடியேன் தனக்குள்ளும்
அமைந்தது ஆயிரம் வர்ணங்கள்
அங்கிங்கு வேறான
வடிவத்தில் புஷ்பங்கள்
மலரின் வகையறாக மணமும் குணமுமாக
அகத்தின் ஓரத்தில் அணைத்து ஆற்றிடும் என்
அவமானங்கள், அவலங்கள், அழுகை
ஆண்டவன் இருப்பதை அறியத்தராதது
அடியாளின் தவறென்றே
அறைந்தெடுக்க
அனுதினமும் தேடுகின்றேன் ஆண்டவனே
அன்பினிலே உறைகின்ற அரும்பொருளே

## புலர்வதன் முன்

'அல்' என்னும் பெயர்தன்னில் அல்லல் களைந்தெடுக்க
அமரர்க்கும் அமைதிதரும் ஆயாச இரவொன்று
அடுத்து வரும்வேளை எதிர்நோக்கிப் பார்த்திட
அமர்ந்தது நாளின் திரை

விழிகளின் ஒளிமறைத்து விழித்திரையின் முகக்குறைப்பு
மருளேற்ற இருளாக மயக்கிவிடும் பொருளென்று
மலங்கிநிற்கும் மானுட மனத்தின் கலக்கம்
மறைத்திட தீர்வரவா(ய்)

இரவின் போர்வையின் இழுத்தெடுத்து புறத்தெறிந்து
இன்றைய சூரியனும் இடைவேளை பார்த்துவந்து
இங்கும் அங்குமாய் இடைக்கிடை மிளிர்ந்து
இடைவேளைக் கோடு

வெப்பத்தின் கொடுமை வியர்வையின் நிறந்தரும்
வேர்த்துழன்று படுக்கையில் வெளியிடம் அறிந்திடும்
இரவில் துயன்றிடான் இங்கங்கு பார்த்திடான்
இப்பொழுது சாமத்தில்

நடுநிசியைத் தாண்டும்வரை நடைபயிலும் நம்பி
நயமாகக் கற்றநூல் நாலாறு காததூரம் நடந்திட
நடுநிசியைத் தாண்டிய வேளையின் குரலொலி
நாற்சந்தியில் ஓத(தும்)

குழப்படி நிறுத்திடாக் குழந்தைகள் ஆடிப்பாடி
கும்மாளம் அடங்கிய விருத்தரும் வேலைக்காகி
வருந்திட மருங்கிட விழித்தெழுந்தார்
வீட்டுக்குள் விலங்கு(காம்)

நாளின் வேலையினை நாடியில் நிறுத்திடுவர்
நாழிகைப் பெட்டியினில் நினைவூட்டச் சொல்லிடுவார்
தலையின் மேல்வைத்து தகவல் சொல்லாக
நங்கையர்க்கு அலாரம்

அசையும் பூமியும் அதனச்சைக் கடந்து
அடுத்த நாளின் கணக்காக ஆள்பவரே குறித்தெடுத்து
அண்டத்தின் பணிமுடித்து அவர் தளத்தில்
ஆண்டவரின் படம்

அதிகாலை மானுடனின் ஆறிய துயில்கலைவு
அவன் பணியை அடுக்காக ஒழுங்கெடுத்த அருந்திட்டம்
அனுமதியைக் கேட்கவென்று ஆவலில் முன்வந்து
அவனின் தொழுகை

## நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு

நீட்டித்த இரவு நெடிந்து கலையும்போது
நீயெனக்குத் தருவதாய் நினைத்திருக்கும் அந்நாளாய்
நாளையும் வருமென்று எம்மனது தானுணரும்
நாள் நிலைக்கா(து)

ஆலயம் அதிற்சென்று அருள்சுரக்க மெய்மறந்து
ஆண்டவனை முன்னிறுத்தி அறிவிழந்து அகங்கொண்டு
அடுக்கடுக்காய் பலகோர்த்து அகழ்ந்தெடுக்கும்
ஆசைகள் கனவாக(கும்)

மும்முறை சிரம்குட்டி முன்னால் குனிந்தெழுந்து
முக்கனி பாலுந்தேனும் பருப்புடன் பாகுசேர்த்து
முன்னவனை மூத்தவனை முன்வணங்க தோன்றிவிடும்
முந்தும் நாயக வணக்கம்

ஆலயத்தின் விளக்கெரிய ஆன்மாக்கள் அனைத்தும்
அகத்தெரிக்கும் ஒளியுடனாய் கரந்தனில் விளக்கையேந்தி
அர்ச்சகர் செய்து வந்த 'ஓம்' போட்டு
ஆராதனை தீபம்

ஆன்மாக்கள் லயிக்கவென ஒன்று சேர்த்து
ஆலயத்தின் தொண்டின்போது மகிழ்வடைந்து அனைவர்
ஆற்றுப்படுத்த வேண்டுமென்று அவருள்ளம்
வினையில் ஆடும் வினையாட்டு

அவனுக்கும் அணுவுக்கும் ஆற்படுத்தும் விசையென்று
அவனையன்றி அசைவதற்கு அவனியில் வேறில்லென்று
அமரர் சொல் நியாயங்கள் மனங்கொள்ளும்
ஆனாலும் அவமெனஅவை

கற்சிலையைத் தீண்டுகையில் கண்ணில் நீர்வெள்ளம்
கடவுளரை முன்னிறுத்திக் கண்களுக்குள்ளும் ஞானம்
கண்ணாகக் கருத்தாக நினைத்தபின்பு
கண்பாராக் கடவுள்

ஆண்டவனை நம்பவில்லை என்றொருவன்
ஆனாலும் அவன் கைபட துலங்கியது அனைத்தும்
அன்னாரின் கீழாவான் அன்பனென்றும்
அறுத்தெடுக்க(கும்) மனசாட்சி

## உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம் ......

இறை சிந்தனையில் இனிதுணரும் மானுடன்
இல்லையென்ற எதையெங்கு இம்மியளவிற் கொள்ளாதே
உள்ளத்தில் ஒன்றித்த ஒருவேறு அலராதார்க்கு
உள்ளமே பெருங்கோயில்

ஊன் கொண்டு ஊட்டியெடுக்க சார் உணவு
உடம்பென்ற அவன் வளரும் ஊனுணவு கொண்டு
வணங்கியெழ வடிவமைத்த வழகுமேனி
வணக்கத்திற்காகும் தலம்

அகத்துளான் புறத்துளான் அணுவிலுள்ளான்
அணுவுக்கும் அணுவாகி அமைதியாக ஆட்கொண்டு
அணைத்திடவும் ஆர்த்திடவும் ஆராதிக்க
அமைதியாக அமர்ந்திருப்பான்

சால்களில் வாயில்களைத் திறந்துவைத்தான்
கட்டுடல் நொந்திடாமல் கடவுளின் திசையிற் கட்டை
அகற்றித் திறந்திட்டால் அங்கு உட்பிரவேசம்
புவிகொண்ட தாய்மடியில்

கால்நீட்டிப் படுத்தபோது கண்டறிந்த மானுடன்
கருவறையின் வாசலிலே கொடியாக உருத்தெடுப்பான்
பரிவாரக் கிரகங்கள் பரவிடவும் பாகத்தில்
கர்ப்பக்கிரகத் தலை

ஆலயம் ஒன்றுவைக்க அழைத்தபோது அரசனுடன்
அடியான்செய் ஆலயத்துள் அத்துமீறிச் சென்றவன் நான்
ஆதிநாளின் பூசலார் புராணத்தை நினைக்கவும்
உள்ளார்ந்த இறைதலமே

உள்ளத்தில் உள்ளாழும் ஒரு தெய்வம் உண்டாம்
உணர்வுகளின் வெளிப்பாடு உதட்டினூடு வந்திறங்கும்
வள்ளல் பிரானை வணங்கிட வழிதரும்
வாய்கோபுர வாசல்

கூப்பிநிற்கும் கைகள்தனில் கோபுரம் காட்டி நிற்கும்
கும்பகத்துள் இறை வருமென கும்பிடுவோன் நம்பிக்கை
எடுப்பதற்குக் கரமொன்று ஏதுவாக
கோமகன் வேண்டுவது

உயிர்கொண்ட திரவமாக உடலெங்கும் ஓடிவந்து
உயிரைக் கொண்டிழுக்கும் ஒருவனின் உயிர்த்துடிப்பின்
ஒலியினில் ஒன்றாய் இணைந்திருக்கும்
ஓடிக்கொள்ளும் சீவன்

## நிலைபெறுமாறு எண்ணுதியேல் ....

பிறந்தபோது பெற்றகொடை பிரியமாக வளர்ந்தது
தனக்குரிய தானதாயின் பிறர் பலரும் பாவித்து
ஊர்சொல்லி யார்சொல்லி உலகமெங்கும் சொல்லவென
அவர்க்கிருந்த பெயர்

ஓடிவரும் காட்டாற்றில் ஒவ்வொன்றாய் மொண்டெடுத்து
ஓடிவந்து தடைதாண்டி தழும்புபல ஏற்றிக்கொண்டும்
புறந்தாங்கி புறதாக்கி புரியாததாக்கி
பெற்றுக் கொண்ட கல்வி

அகந்தனில் அன்பிலார் அவர்க்குள்ளும் சென்றாகி
அழுக்காறு கொண்டவர்க்கும் அகமகிழ்ந்த முகம்தாங்கி
அடுத்துக் கெடுக்கவந்தார் அவரை மீறிவந்து
அவன் கொண்ட பதவி

பிறப்புடன் பிணைந்து வந்து பிரித்திடும் வகையதாகி
பிரியம் என்ற பெயராலே பிணைப்பைக் கொண்டபோது
பின்நின்று முன்சொல்வார் பிரித்திடவும் மாட்டா(து)
பிணைப்பான உறவுகள்

பேறாகப் பெற்றெடுத்துப் பின்னும் வளர்த்துவந்து
பிரியமாக அவன் சேர்த்த புகழ்சேர்ந்த பெயர்தானும்
பொடியாக ஆகிடவும் பொருத்தமில்லாது
பிறழ்ந்தது ஒரு நாளில்

தீயினால் வேகாதாய் திருடர்கள் கொள்ளாதாய்
திரட்டிவைத்திருந்த திருத்தமான புத்தகத்தில் வாழ
திடுமென மறைந்தது கண்ணுறவே
தொலைந்தது கல்வி

துன்பத்தைத் தருவதற்கு துணிந்து நிற்பவரால்
தூரத்தே சென்றுவிட துரத்திச் சென்றவனுக்கும்
துணிவாக தட்டிப் பறித்தது
தொழிலின் தலைமை

உறவுக்கே பிரிவினை உரியதாய் ஆக்கி
உறவுடனேவரும் வாழ்க்கையை ஒப்பாததாக்கி
உறவின் அருமையைத் தகர்த்தது
உதவாத உறவுகள்

## முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை

பொருந்தாமை,தொடராமை பொருத்திவிடவும் வந்து
அமையாமை, அகத்தினுக்கு ஒவ்வாமை உள்ளதானமை
இயலாமை வரும் அனைத்திலும் மாறாது
நிலையாமை நிலைத்திருக்கும்

பிறவியோ தனியல்லால் தொடர்ந்து வருகையிலே
பெயருக்கு முற்பிறப்பில் பெற்றெடுத்த வினையறாக்கள்
நிலையாகப் பின்னே தொடர்ந்துவரும்
பிராப்தப் பலன்

முற்பகல் செய்வினையில் பிற்பகல்போலும்
முன்னாலே செய்த வினை முடிந்திடாது நிற்கும்
முண்டியடித்தும் முன்வரமாட்டாது
முன்னாலே வினை

இப்பிறப்பில் செய்தவையால் இனிது நடக்கும்
இன்னாத தில்லாதாய் இருப்பில் நின்று வாழ்வதாய்
இகலோகத்தில் செய்யும் நல்லது
எம்கணக்கில் வந்திடும்

அன்றன்று செய்வோர்க்கு அவ்வப்போதே
ஆகாமிய வினைகளாக வந்துசேரும் அனுதினமும்
இங்கங்கு பாராது வியந்திடாது என்றும்
இதுவென்று சொல்லிவிடும்

செய்தது சமைத்தது செப்பியபோதும்
சேராத வினைகளும் வந்திட ஓர் புறத்தில் நிற்கும்
சென்மதியாகும் செலவினம் போலும்
சேர்மதியாக நாளை

பெருங்கடலென திரளென பெரியதென்ன
பிறவிக்கடலில் நீந்தியுழலும் பேறுடைய பசுக்களாக
பெற்றதப் பேறென புரிந்திடவும்
பெருங்கடலாய்ப் பிறவி

நீந்தினாற் கரையதிற் சேர்வதில்லை யாரும்
நீந்திட முடியாதும் உழன்று வாழ்ந்து சுழன்றுநிற்பார்
நடுக்கடல் சுழிதன்னில் நீந்துவதாய்
நன்மக்கள் வாழ்வு

அனைத்திற்கும் காரணம் அறிதிலாராய்
அன்றன்று பாட்டைப் பார்த்து வாழ்ந்துவரவும்
அவரவர் கணக்கிற்கு அத்தாட்சி
அப் பிறவியின் வினை

## ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே

நாதமாக கீதமாக நாமுணரும் சத்தமாக
நற்கடலும் நறுங்காற்றும் நாகணவாய்ப் புள்ளினமும்
விலங்கினமும் வேறான மனிதர்களும்
விதவிதமாய் ஓசையில்

ஒலியின் முதலெல்லாம் உன்னிடத்தில் அடக்கம்
ஒவ்வாது நின்றாலும் உன்னாலே ஆட்பட என்பார்
ஓசையினை வெளியிட ஒன்றில்லாது
ஊமையாய் மனிதர்கள்

ஆட்டுவித்து அசையவைத்து அதிர்வினாலே
ஊடகத்தில் ஓசையினைக் கடத்தவைத்த உன்னாலே
காதுக்கு குடைந்து அனுப்பிடாதாய்
செவிடராய் சிலர்

காட்சியாக மாட்சியாக அனைத்து அழகின்
கண்ணிறைத்து மனம்நிறைக்க காண்போர் களித்திருக்க
கண்களில் ஒளியையும் இழந்து
குருடராய் மனிதர்கள்

இருபுறத்தில் அமைந்து இருவேறு செயல்கள்
இருந்தாலும் ஒன்றின்றேல் ஒருவாழ்வும் சிறக்காதே
இருக்கவேண்டிய அளவில் இல்லாது
இருகரத்தின் குறை

இல்லாது போனாலும் இடறிவிடும்
இருகாலில் சமநிலையும் தளர்ந்துவிடும் போராட்டம்
இல்லிரண்டு கால்களினால் இருண்டுவிட
இடர்ப்படும் நொண்டி

ஈரடுக்கில் கரங்களுண்டு உமக்கு எல்லாம்
இல்லாத மனிதனுமோ இரு கரமே கேட்கின்றான்
இருந்தாலும் கொடுத்துவிட வழியில்லை
விதியென்று ஒருகூற்று

பிறப்பினிலே பெற்றுவிடும் பேறு என்றும்
பிரியமாக நீரளித்த பெறும்பொருட்கள் தாமென்றும்
பொருட்களை நாம் இரந்துநின்றோம்
கிடைக்காததே எந்நாளும்

## உலகிற்கொருவனாய் நின்றான்

முதலாய், தேவனாய் முன்நின்று காப்பவனாய்
முப்பத்து முக்கோடி தேவர்க்கு முற்றான முதல்வனாய்
முடிவிலா முற்பொருளாய் உருவான
ஒருவன் உலகில்

ஏத்தி நிற்கக் கரங்கள் எமக்கிருந்தும்
ஏத்தித் தொழுது நாளும் இரந்திருக்க உனையன்றி
வேறொன்று தெய்வம் காட்டவில்லை
வேறில்லை போக்கிடம்

நினைந்து வருந்துவது நீயென்னைக் காக்க
நீட்டித்த வாழ்விலெல்லாம் நீயாக நிறைந்திருக்க
நெடும்பாதை தன்னில் நிழலாக
தொடரவும் நீ

காத்துவந்த கதைகள் பொய்யானதோ அன்றி
பார்த்திருக்க உனக்கும் பொழுதின்றிப் போய்விடுமோ
காலங்கள் மாறியதால் கதைகள் போல
கருக்களைத் தொலைத்தனவோ

மதங்கள் பலவந்தபோதும் மானுடம்
மாற்றத்தில் இல்லாது மனுக்குலத்தின் தர்மமாகும்
பலவிதமாய் மதம் இருந்தும்
மாறாத தெய்வமென நீ

பலவாய் பிரிந்து பாதைகள் போகும்
பயணத்தின் முடிவிடம் ஒன்றெனவே நிறைவாகும்
பலவாறு செய்யும் பாதையிற்
பார்ப்பதற்கு கடவுள்

ஒன்றிலும் மாறாமல் ஒவ்வொன்றிலும்
ஒருவாறு இல்லாது உன்னுடனும் நீயாக
ஒரு பெரும் தெய்வமென்று
உன்னைப் போற்றும்

இராமபாணம் குத்தியதும் நாவினிலே
இராமரை நினைத்திருந்த தேரையாய் நானானேன்
அண்ணாந்து பார்க்கும்போது நீ
ஆரிடம் போய்ச்சொல்ல

## தேச விளக்கெலாம் ஆனாய் நீயே

ஒளிபிறந்ததும் உலகில் உயிர்பிறந்தது
ஒளிதரும் முதலாக அனைத்துக்கும் உயிர்ப்பாக
அமைந்திருக்கும் அருணனின் கதிர்களின்
அகவொளி நீ

அது இல்லாதபோதும் அழுது நிற்கவிடாது
அங்கிருந்து அருளொளியைத் தனதாக உருவாக்கி
அழகுநிறை நிலவு என அமர்ந்த
ஆண்டவன் நீ

அருகினில் இல்லாமல் இருளில் நின்று
அங்கொன்றும் இங்கொன்றும் ஆனதாக ஆட்டி
தடையில்லாக் காட்சியாகும்
தாரகையும் நீ

கண்களைக் கட்டியே கதறித்தொடங்கும்
காட்டில் இறக்கிவிடும் வாழ்வும் உன்னாலே
காட்டியாக வந்துவிடும் முன்னாலே
காலத்தில் தொடர்ந்துவரும்

வலிமைகொடுத்துவிடும் வாழ்வில் வளமும்
வசந்தமும் வந்துவிட வாழ்நாளில் மலர்வுகாண
வடிவமைக்க வந்துநின்று
வல்லமை தரும்

ஆற்றல் தழைத்துவிடும் ஆண்டவனின்
அருள்நாமம் சொல்லிவிட்டால் அனைத்தும் தந்திடவே
ஆற்றாமை அகற்றிநிற்கும்
அற்புதத் திருவருள்

முதன்மை பெற்றுவிட முழுதாய் முயன்று
முன்னின்று போய்வரவும் முத்தாய்ப்பாய்க் கொடுத்து
முதலிடத்தையும் பெற்றுத்தரும்
முத்தென நீ

மூட்டெலும்பாக முதுகிற் தாங்கிக்கொண்டு
முதுமையிலும் சரியாது முட்டுக் கொடுக்கவரும்
மந்திர மலைதாங்க முன்வந்த
மலைக்குக் கிடை

# மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

அன்னையின் உதரத்துள் அமைதியான இடத்தில்
அமர்ந்து ஆனந்தம் அன்னையின் இன்பத்தில்
அல்லல் அறிந்திடா வகையில்
அன்பான ஸ்பரிசம்

அன்னைக்கும் அமைதியில்லை
ஆர்த்தெடுக்க யாருமில்லை அவளருகில்
அன்றாட வாழ்வுக்கும் வயிற்றுக்கும் இல்லாதாகி
அவதியில் உழன்றிட வந்தது அமையும்போதே வாழ்வு

அகச்சிறையைத் தாண்டியதும் அன்புச் சிறையில் வாசம்
அன்னையின் தந்தையின் கைகளில் வாழ்வு
அளவில்லா ஆனந்த நிலையிலாடும்
அன்பினால் மாரிபெய்யும்

அழுதழுது வருபவன் வாழ்வு
அநாதை என்னும் பெயர் வைத்துவிடும்
அழுக்கிலே தொடங்கி அரவணைக்க ஆளுமின்றி
அடுத்துப் பார்ப்பவர் அனைவர்க்கும் எரிச்சலாகும் அன்று

பள்ளிப் பருவமெல்லாம் பாடிக் கதைகள் சொல்லும்
பாலர் பலர்க்குமாக பணிகள் பூண்டுதரும்
பற்பல நிறத்தில் பகல் வளர்த்திடும்
பசுமையான நினைவுகள்

பள்ளியில் பசிதாக்கும்
பாடங்கள் புளிக்கவைக்க பள்ளியில்
பலரின் கண்களும் பலவிதமாய் நகையாடும்
பாடத்தைப் போலவே கல்வியும் சுமையாகக் கடந்திடும்

காதல் மலர்ந்திடக் கண்கள் நிறைந்திட உளம்பார்க்கும்
கண்ணுக்கு விருந்தாக அழகு பலசேர்த்து
கைபிடித்து மனைவாழ்க்கை
கனவிலும் மேலாக

கண்களில் தெளிவில்லை
கண்ணாக யாருமில்லை அவனுக்கு
காதலிலும் மணமில்லை கைபிடித்துவந்தான்
கல்யாணமென பாபமொன்றைச் செய்துவிட்ட கொடுமை

இல்லாதவர்க்கு இவ்வுலகமில்லை பொருளின் கைகொண்டு
அல்லாதோர்க்கு அவ்வுலகில்லை அருள்கொண்டு
இல்லாமை இயலாமை இருக்கும்போது
எவ்வாறாகும் மண்ணில் நல்லவாழ்வு

## ஆரோடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்

ஆண்டவன் காப்பானென்று ஆர்ப்பரித்து புலம்பும்போது
ஆண்டவா நீயுமேன் வருவதில்லை
காத்திடக் கரம்தரின் கடலுக்குள் விழுவதாய்க்
கயவர்கள் சொல்தனைக் கேட்பதாலா

ஆள்பவனாய் அடிமையாய் அமைந்ததொரு வேடத்தை
ஆண்டவா நீயுமேன் அணிவதில்லை
அலுத்துக் களைத்ததால் எடுத்துவிட்ட வேடமதும்
அவமாகத் தோன்றிட அமர்ந்தனையோ

திக்கற்றுத் தவிப்பவற்குத் துணைதரும் தோணியாய்
தெய்வமே நீயுமேன் வருவதில்லை
திக்காகச் செல்வதால் திசையனைத்தும் காப்பதால்
தேவையான நேரமதும் கிடைப்பதில்லையா

தோன்றாமல் தேற்றிடவே துணைதரும் கரங்களை
தூயவா நீயுமேன் துடைப்பதில்லை
தோல்வியில் துவன்றிடா மனம்தனைத் தந்திடவும்
தொலைவினில் நின்றுநீ பார்ப்பதுவா

ஆண்டவன் வருவானென்று ஆலயம் புகுந்தபோதும்
ஆண்டவா நீயுமேன் காக்கவில்லை
ஆசிரியர் நால்வருள் முதல்வரின் மணம்போல
முத்திதர இடம்கொடுக்க சிந்தித்தாயோ

சிறுவரின் துயர்கண்டும் சிறிதும் இரக்கம்கொள்ளாது
சிந்தனை இல்லாது நீ நின்றதென்ன
கம்சனின் கொடுமையில் அகப்படா குழந்தைபோன்று
உன்நினைப்பு வந்ததனால் ஒதுங்கியதோ

மகளிரின் மானம் காக்க மறந்திட்டுப் போனதாய்
மாயனே நீயுமேன் வந்திடவில்லை
மலையாகக் குவிந்தபோதும் மறைக்கவென்று ஆடைதந்து
மகாபாரதப் புராணத்தை நினைத்ததாலோ

கள்வர்களை அழிக்கவென காமுகரை ஒழிக்கவெனக்
கடவுளே நீயுமேன் வருவதில்லை
கிருஷ்ணபிரான் ஒருபிறவி எடுத்துவர வேண்டுமென்று
கிளர்ந்தெழவே சந்தர்ப்பம் அமைத்திடவோ

## எங்கெழுந்தருளுவது இனியே...

என்றோ உயிரைவிட்ட எலும்பைச் சேர்த்தெடுத்து
எண்ணிப் பார்த்திடாது பெண்ணாய் கொண்டமைத்த
எம்பிரான் செயல்மீது எந்தன் நம்பிக்கை
என்னிடத்தும் எலும்புகள்

ஒன்றொன்றாய்ச் சேர்த்ததில் ஓராயிரம் எண்ணிக்கை
ஒரு குழியில் கிடந்திடவும் ஒன்றன்மேல் ஒன்று
ஒருமித்தெடுத்த ஒருவாறு ஓடி வா
ஒருவனாய் நின்றிருக்கும் இறைவனே

தீராத நோயெல்லாம் தீர்த்து நிற்கும் ஒரு நீறு
திருக்கரத்தில் ஏந்தியதால் தீர்த்திட்ட நோயை
திருவரனின் திவ்விய நாமம் சொல்லத்
திக்குத் தெரியாமல் சென்றோட

என்னிடத்தில் உடல் நோய்கள் ஏராள மாகவுண்டு
எடுத்துவந்த மருந்தோ என் வருத்தம் போக்கவில்லை
எம்பிரானை நினைத்துவந்து என்கையில் நீறெடுத்து
என்னென்னவோ செய்தேன் பலனில்லை

முதலை மொண்டு கொண்டோடிய புதல்வனை
முழுமையான மீட்டெடுத்த உன் புராணம் அறிந்திடவும்
பிராணியேதும் பொருதிடாது பின்வந்து உதவுமென
பேதையென் தவிப்பு

இறையிடத்து நம்பிக்கை இயம்பியதால் மார்க்கண்டன்
இயமனுக்கு அழிவினை எடுத்துக்கொடுத்த
எம்பிரான் செயலையும் கேட்டவன் தான்
எனக்கும் அதுவேண்டும்

தன்னலம் துறந்தவர் அவர்தன் ஆவல்தான்
தான்வாழவிரும்புவதாய் யாரேனும் நினைத்திடவோ
தன்னைக் காத்திட நீ வருவாயென
தளர்ந்திடும் பக்தன் உள்ளம்

வாய்ப்பெல்லாம் வழங்கியதும் வள்ளலேநீயும்
பார்த்திடவாயினும் வந்திடவில்லை
ஏற்றிடப் பாத்திரத்தைத் தேடி நிற்கின்றாயோ
எங்கு எவ்வாறு வருவாயோ

## நலமிலன் நண்ணார்க்கு நண்ணினர்க்கு

எலும்பினைப் பெண்ணாக்க முடிவதெனச் சொல்லியதால்
என் அன்பன் வாக்கை ஆட்சியாக்க முனைவதனால்
என் அடியான் செய்தான் அற்புதம்
என் சார்பில்

நீறின் நற்குணங்கள் நாற்திசையும் நவின்றிடவும்
நீறின் மகத்துவம் முழுத்தகனம் கொடுத்துவிடவும்
நீறால் நோயைக் குணமாக்கி நீவிடவும் சித்தம்
எனக்குச் சின்னம்

முதலை வாய் நம்பியவனைக் காத்தருளுவது
முன்னின்று தொழுதெழுந்த அடியவர்க்கு
முதலாக ஓருண்மை சொல்லவந்தேன்
முழுதும் வெற்றி

காலனைக் கால்களால் உதைத்ததனால்
காணாமற் போய்விடவும் கரத்தின் பாசம்
வாழாது நின்றிட்ட பெற்றோர் பிறர்க்கு
வாரியே வழங்க

இறைவன் வருவானென எதிர்பார்க்கும் மானுடர்க்கும்
என்றும் என்கருணை இடையறாது வழங்கிவிடும்
இறைவனின் நினைவே நீவிடும்
என்னவன் வலியை

இன்பமாய் வாழுதல் வேண்டில் ஒரு
இறைவனின் பிணைப்பினில் நீண்டு செல்லுதல்
நன்மையாய் அதை நவின்றிடல்
நல்லோர்க்கு அனுபவம்

இல்லை என்று சொல்பவரும்
இருந்து வாழும் இந்தவிடத்து வாழ்க்கையில்
இருக்கும் விதத்தையே உணர்ந்திடவும்
இறைவழி மக்கள்

எங்கெங்கு ஆயினும் எதிர்நின்று
எல்லாமாய் அமர்ந்திருக்கும் ஒரு பொருளை
நாடுவோர்க்கு நல்லவன் நாடாதாயின் அல்லன்
நலமுரைக்கும் இறைவன்

## நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்கு

இறையவனின் படைப்பென இன்றும் அவன் சொல்வதால்
இன்னும் இவன் ஆகின்றான் அர்த்தத்துடன் ஆத்திகன்
இல்லையென்றான் இவனுக்கொரு வேறு தெய்வம்
இம்மையிலும் மறுமையிலும் இறை என்றான்

இன்பத்தை நோக்கிடவும் துன்பமாவதால்
இங்கிங்காகவேனும் இறைவரவேண்டி
இறைஞ்சுகிறான் எனினும் அவர்
இன்னலுக்குத் தீர்வேதுமில்லை

இம்மையிலும் அறியாத
மும்மை விதியுண்டு
இன்று அவனழுதிட
இன்னாததேது

இறைஞ்சிடின்
இறைவரும்
என்றேதும்
சொல்

மருந்து வாங்க முடியாதவனாய் வியாதி மிகக்கொண்டும்
மருந்தாக உன் நீற்றை மனமுவந்து அணிந்திட்டான்
மளிகைச் சாமான்போலே அவர் நோயின் வரிசை
மறந்தும் ஓர் மருந்தாற் குணமாக்க விழையாது

மருந்து பலவாங்கிடவும் பணமில்லை என்றும்
மறைபொருளை நினைத்து மன்றாடிநிற்பான்
மலைக்கும் அவர் மனதிற்கு சாந்தியோ
மருந்தும் வந்திடாது மறைந்துவிடும்

மருந்து வாங்கிடப் பணமில்லை
மானிடனுக்கு நூறு வியாதி
மனமுவந்து கொடுத்திட்ட
மறையே கண்பாராய்

மருள்பவர்களை
அருட்செய்ய
மன்னவா
வந்திடு

# கண்ணும் கருத்தும் நிறைந்தாய்

அகிலத்தில் ஒன்றாக அடங்க வைத்து
அருவமாய் அமர்ந்திக்கும் திரு
அதிலே கொடுத்திருக்க
அனைவர்க்கும் ஓரிடம்

உதரத்திற் காற்றெனவே கலக்க வைத்து
உன்னதம் ஆனதாக
உயிரென்னும் பொருள்
ஊட்டிவைக்க

அண்டத்தில் பொருளெல்லாம் பிரித்தெடுத்து
பொருத்தமாய்க் குறித்திருக்க
நீ, நான், அதுவென்று
வகுத்ததுண்டு

அதிலிருந்து நீயாக விலத்தி நின்றும்
அங்கிங்கு அடக்காமலிருக்க
வேறுவேறாய் நின்றாய்
அடங்கவில்லை அங்கு

அழகுடன் உடலொன்றை அமைத்து எடுத்து
பிரிவு சொல்ல ஆணும் பெண்
ஆனாலும் ஒற்றுமையும்
ஒருசிலவற்றால்

அங்கங்கு நெளிந்திடவும் வரைந்த போதும்
நயப்பதற்கு பார்ப்பவரை நடத்தி
ரசித்திட வைப்பதற்கு
வளைவின் அழகு

அங்கங்கள் யாவையும் வேறு வேறாய்
அமைந்திருந்தது வடிவத்தில்
கொண்டு வைத்திருப்பதாய்
பொறியுடன் அவயவம்

அது நன்றாய்த் தொழிற்படவும் கணக்கு
ஆளாட்கு வேறுபட அதற்கு ஆணை
உத்தரவிட்ட ஒருவனின்
உள்ளத்து மகிழ்வு

அன்பென்ற பொருளிலே ஆன்மாவாய்
அங்கிங்கு இல்லாமல் அதுவாக
ஊட்டிவைத்து வளர்த்த
ஓருயிர்

அறிவையே முதலாகக் கொண்டு ஒழுக
அனைத்தையும் அவனுக்காய்
ஆக்கிவிட்ட பின்பு
அமைதி

பகுத்து அறியவெனக் பகிர்ந்த பலதும்
பிரித்துக் கொடுத்த அறிவு
பார்த்து அறிந்திடவும்
பயன்படாத

அறிவிக்க வேண்டிய அதனுட் சென்று
அனைத்தும் என்று அளந்து
வரைந்தவன் ஆனாய் நீ
அறிவை

அனைத்தையும் கொடுத்ததில் உன்விருப்பம்
கேட்பது கொடுப்பதில்லை தானாக
அழுதழுது கேட்டிடினும்
அதனைத் தராது

அவனைப் பழிசொல்ல ஏதுவாக ஒன்று
அடுக்கி எடுப்பதுபோல
ஏதும் வைக்கவில்லை
அவனிடத்தில்

அறிவித்தால் மட்டுமே அறிய வைத்தாய்
அறிந்ததை மட்டுமே ஆற்ற வைத்தாய்
அறிவுக்கு எட்டாமல் அப்பாலே
அனைத்துமாய்

கண்ணுக்குக் கண்ணாக இருந்து வந்தாய்
கருத்துக்குள் நீயாக நின்று
காண்பதில் சுகமானாய்
கண்களாக

## குருவாய் வருவாய் அருள்வாய்

தெரிந்திடாதப் பாதையில் தெரியாமல் நான் செல்ல
தேடுகிறேன் துணையாக உன்னையங்கு
தெய்வமே துணையென்று தீர்மானம் செய்ததால்
தெய்வத்தைத் தேடி நின்று பார்க்கின்றேன்

திசையொன்றின் ஒளிதெரியத் தெரிந்திட்ட பாதையை
திருவே நீ காட்டியதாய் தெளிந்திட்டேன்
திக்குத் தெரியாமல் முக்காடும் பக்தனுக்கு
திசைகாட்டும் உன் செயலாய்த் தெளிந்திட்டேன்

முட்கள், கற்கள் முன்வரவும் முகங்கொடுத்து
முனைப்பாகப் பாதையிலே முன்னேறினேன்
முன்னே செல்பவன் நீயென்ற துணிச்சலில்
முறைதலை ஏதுமின்றி முன்னால்வந்தேன்

தடைவரும் பாதையில் தடக்கிடாப் பயணமாக
தவழ்ந்தும் நடந்தும் பயணமானேன்
தவறியே வந்தாலும் தடுத்திட வரும் உன்னைத்
திசையெங்கும் தேடியுமே நடந்திட்டேன்

எவ்விடத்தும் எக்காலும் அறிந்திடா எனக்கென்று
எம்பிரான் நீயல்லோ வந்திடவேண்டும்
உன்னைச் சரணடைந்து உன்நாமம் சொல்லிநின்றேன்
உன்னையன்றி வேறொன்றை அறிந்திலனே

கல்விக்காய், தொழிலுக்காய், கருமங்கள் ஆற்றுகையில்
கருவியாய் நீயங்கு வந்திடவேண்டும்
காண்போரும் திகைத்திடவே கடமைகொண்ட வீரனாகக்
கடமையாற்ற நீயெனக்கு பணிதரவேண்டும்

இல்லறத்தில் இணைந்திடவும் இனிதாக வாழ்ந்திடவும்
இறைஞ்சி நின்றேன் இறைவாநீ இன்முகமாக
இனியதை உணர்த்திடவும் இன்னாதென்று சொல்லிடவும்
இன்னோரன்ன அனைத்துமாக நின்றிடவேண்டும்

திக்குத் தெரியாமல் தீதுலகில் வந்துதித்தேன்
திருவே நீ துணையாக முன்வரவேண்டும்
அனைத்திற்கும் வழிகாட்ட ஆசானை வந்துநின்று
குருவாக அருள்சுரந்து பார்த்திடவேண்டும்

## எத்தால் மறவாதே நினைக்கின்றேன்

பிறப்பதற்கு முன்பொருநாள் உரைக்கவந்தேன்
பிரியமாக உன்னிடத்தில் சேதியொன்று
வந்து பார்க்கவென இவ்வுலகில்
வளமாய்ப் பலதும் இருந்ததனால்

நடிப்பதற்கு இடம்கேட்டு வந்த எனக்கு
நாயகி தெரிவினைச் செய்து வைத்தார்
துணையாய் நடித்திட வரலாம் என்று
தோதான பலரையும் கொண்டு வைத்தாய்

நிபந்தனைகள் மாறாது என்று சொல்லி
நீட்டித்த பட்டியலைச் சொல்லி வைத்து
நேருக்கு நிஜமாக நடக்க என்று
நல்லதோர் ஒத்திகையும் நடந்தது அங்கு

எப்போதோ முடிந்த காரியம் என்று சொல்லி
என்னை ஒரு நாளில் பிறக்கவைத்து
எந்தன் அறிவினைக் கட்டி வைத்து
எண்ணிலடங்காக் கருமங்கள் செய்துவைத்தாய்

இன்று எனை மறக்கச் செய்ததால் எனக்கு
இப்பிறவி ஆனதும் இக்கட்டான நிலை
இந்நாளில் பேசவெழுந்த பேச்சுக்கள் எல்லாம்
என்றோ நீர் சொன்னதும் மறந்துபோக

எப்போதோ திட்டமிட்ட காரியம் இது
உந்தன் முன் ஒத்திகையால் நிரம்ப வைத்து
இப்போது எனக்கேனோ வினைதரவும்
எங்கெங்கு நானாவேன் விதைவிதைக்க

இறந்துவிட்ட காலமதை எடுத்துவந்து
உயிர்கொடுத்து ஊனளித்துப் பார்ப்பதுண்டோ
எப்போதோ நீர் சமைத்த விதிகளுக்கும்
இப்போது வினையெனக்கு வந்திடுமோ

பூவுலகில் வந்த நானும் செய்வதானால்
பூமகளின் காதலனாய் உனைத் தொழவும்
இத்தாலும் வணங்குவதற்கு மலர்கொண்டு
எத்தாலும் மறவாதே நினைக்கின்றேன்

## ஈவதொன்றெமக்கு இல்லையேல்

இரப்பவர் தனக்கெல்லாம் எடுத்துக் கொடுத்து
இன்முகம் கொடுத்து உபசரிக்கும்
இல்லையென்றிலாது
ஈதலில்

தன்னெஞ்சறிந்திடப் பொய் பேசாதிருந்து
தன்னலம் மறந்தொரு தரம்கொண்டு
தரணியில் வாழும்
தக்கவர்கள்

இறைவனை நினைந்தும் மறை தொழுதும்
இறைமகன் தானென்ற பெருமையைத்
தனக்கே உரியதாக்கும்
இறைபக்தன்

தன் நிலையில் இருப்பதில்லை தவறிடுவான்
தண்டித்துவிடும் காலம் தவித்திடவே
நல்லவன் ஆதலால் நானிலத்தில்
நலிந்திடவும்

சோதனை என்று சொல்வார் அவர்க்கு அது
வேதனை வடிவமாக வந்துசேரும்
நல்லவன் என்பதில் நீ தரும்
நல்லுணர்வு அல்ல

ஊரையடித்து உலையொன்றில் போட்டுவைப்பான்
ஊதாரி என்று உலகத்தார் இகழ்ந்திடுவார்
ஊருக்கே கண்பட அவன் வாழ
உலகத்தார் சாபம்

நடப்பிற்குக் காரணம் ஆவது வினையெனில்
நடத்தி வைப்பவர்க்குக் கண்ணில்லை
நல்லது செய்பவன் ஒருவன்
நரகத்தின் பிடியிலே

ஒழுக்கமாகிப் பண்பதாகி ஒழுகுவோர்க்கும்
உன்னிடத்தில் பங்கில்லை அளிக்க
இத்தனை செய்திடவும் எமக்கு
ஈவதும் இல்லை உமக்கும்

## கள்ளப் புலனைந்தும் காள மணிவிளக்கே

கண்களால் கண்டிட வேண்டாதெனக் கெடுதலைக்
கதவினை மூடிவிடின் காணாதாகும்
கெட்டதாகவும் நல்லதாகவும்
கரையிலாக் கனவு

கைகளைக் காட்டிட வேண்டாதெனக் கருதியும்
கரங்களைப் பின்கொணர்ந்து காட்டின்
காவலாகும் அடுத்தவர்
காரியப் பாகம்

நல்வழியில் செல்வதற்கு நாவினை அசைக்கவரின்
நாறடித்துச் சுடுவதாகக் கிளர்ந்தெழும்ப
நாக்கின் முறைசெல்லும்
நாலும் நடக்க

இறைபுகழைக் கேட்கவென செவியை விரித்தால்
இல்லாத பலவுமங்கு இறைத்துவிடும்
இனியதைக் கேளாமல்
இரண்டு செவிகள்

நல்லதைப் பேசுகென்று நான்சொல்லி நின்றிடினும்
நன்மையைக் கண்டிடாத நம்மவர்க்கு
நல்லவற்றை சொல்லித் தராத
நாறிய வாய்

நன்றாக நினைக்கச் சொல்லிய மனத்தில்
நாலாக வந்து செல்லும் எண்ணம்
நமக்கு நல்லதென சொல்ல
நலமின்மையாக

உண்மையை உணர்ந்தறிய உள்ளதாக ஒன்று
உண்மையில்லா மெய்யின்மீது ஓதும்
உள்ளதும் இல்லாதாய்
ஓருடலில்

விளக்காக ஒளிகொடுக்கும் புலன்கள் எல்லாம்
விளக்கமின்றிச் சேர்த்திட வினைகள்
கண்ணான உடலினையும்
கடத்திவிடும் களவு

## இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்

விடிந்ததும் படுக்கையில் விட்டெழும்ப மாட்டாது
விண்ணகத்து அரசனே விரைந்துவா என
உந்தன் திருவடியிற் சமர்ப்பித்து
உதிக்கும் நாள் உனதாக

குளித்து முடித்ததும் குளிர்பாராது வந்து உடல்
குலுக்கி நிற்கவும் குறைசொல்லி நில்லா
கும்பிட்டு நின்றுன்னைக் கேட்டு
குறித்தெடுத்து விடயங்கள்

உண்ணும் போதிலும் உன்னை ஒருகாலும்
உளத்திற்குப் புறம்பாக மாமிசம் என்னில்
உன்னடி வணங்கியே உணவெடுத்து
உனது பேரால் உண்டு

வேலை போகும்முன் வேலையில்லா உனைவணங்கி
வேண்டும் பொறுப்பனைத்தும் பவ்வியமாய்
உனக்களித்து வேளைவரக்
களித்திருப்பேன்

என்றும் மறப்பதில்லை எம்பிரானே உன்னை
உடன்வரும் ஒருவராகவே உளத்தெளிந்து
உன்னிடம் சொல்லி விடும்போது
எனக்குள்ளும் திருப்தி

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நெருங்கிவந்து
என்னுடன் ஒன்றாக நிற்பதனால்
உமக்கொன்றும் விசேடமாக
வேறெந்த வேலை

பலவாறாய் இருந்தபோதும் பகிர்ந்து விட்டதனாற்
பரமாத்மா என்வேலை பாரம் குறைந்ததென்று
பதியிடம் பொருந்தினேன் போய்ச்சொல்ல
பற்பலவாய் வினையெடுக்கும்

என் நெஞ்சை விட்டகலாது நீ நின்றாய்
என் நாளும் என்வேலை உனதாக
உனையன்றி உணர்ந்திடுவே
வேறெந்த விதியெனக்கு

## அங்கையுள் அனலும் வைத்தாய்

அகலத் திறந்திருக்க அங்கிங்கு மாற்றாது
அங்கையுள் அனலை வைத்தாய்
அனலின் தாக்கம் அங்கெல்லாம் சென்றிடாது
அமைதியாய் ஆற வைத்தாய்

உன் கையை வீசிடவில்லை உணர்வுகாட்ட
உன் ஆத்மா உணரவில்லை
புலனுணர்வைப் புரிந்து கடந்தவன் நீ
போதுமென்று விட்டுவிட்டாய்

பசிக்கும் ஏழையின் அடுப்பினில் நெருப்பில்லை
வயிற்றுக்குத் தீமூட்டி விடவும்
பகலில் இரவதனைப் பாருக்குப் காட்டியதோர்
பட்டினிச் சாவாக அவர் வாழ்க்கை

தலையில் குளிர்கொண்டாய் கங்கை நீரால்
சலதோசம் வரவில்லை உனக்கு
சலத்தைத் தொட்டாலே கண்டமெனப் பலர்
நீரின்றி அமையாத வாழ்வில்

அனலோ சுடுவதில்லை புனலும் குளிர்ப்பதில்லை
ஐம்புலனும் உன்னடியில் அடக்கம்
எதையும் தாங்கி நின்று எண்ணிலா கருணையுடன்
உணர்வுகள் கடந்திட்ட ஒருபொருளே

கனலை இழந்திட்டாய் கட்புலனும் அடக்கிட்டாய்
கடுங்கோபம் எங்கிருந்து வருவதுண்டு
பக்தர் குறைதனை மனங்கொண்டு சொல்லிட்டால்
மனமதனை மறைப்பதுவோ மருளுடனே

உணர்வுகளின் அடிமையாகி ஒவ்வொன்றாய்ப் பயத்துடன்
ஒடுங்க ஒளித்துக் கொள்ளும் ஓரேழை இவன்
பயங்கொண்டு வந்தது உயிர்க்கும் சமுதாய
அச்சத்தின் மத்தியில் அவன் வாழ்வு

அக்கினியைக் கைக்கொண்டு அங்கையில் வைத்தெடுத்து
ஆக்கினையாய் நின்றுகொண்டு நிக்கலாமோ நீ
ஆண்டவா உன்னிடம் வந்தான் அவன்
ஆத்மார்த்த அறிவோடு

## அடியார்தங்கள் அல்லல் சொன்னக்கால்

வயிற்றுக்குள் நெருப்பெரிய வந்துசேர்ந்த வறியவர்கள்
வருந்தியழுவது விழாமல் காதுகள் கொண்டு
வரந்தரும் வள்ளலாய் உன்னைச் சொல்ல
வளர்ந்திடவே மாட்டாது நீ செல்ல

வருத்தம் பலவகையில் வரக்கண்டு பயங்கொண்டு
வழுந்தும் காட்சியினைக் காணாது உன்கண்கள்
கருணை உனக்கென்று பலர் சொல்வார்
அதில் கனவு வருந்திடாது

தனக்கோர் இன்னல்வர தானழுத பெண்ணினமே
அடுக்கும் வாசகமும் விழுவதில்லை
உன் கருத்தில் ஊன்றியதாய்
உணராது போனாய்

பாலகன் அழுதிடப் பாற்கடலை அழைத்துவந்த
புராணமும் எமக்குப்பார் மறந்துபோகும்
பாலகர் அழுதிட பால்தராத
பாகுபடுத்தும் புராணம்

முயலகன் நோய்கொண்டு முனங்கி வருந்திநின்ற
முற்றிய நிலையில் நோய் கொண்டு வாழ
முன்நின்று வணங்கும்போது வராத
முதல்வனான இறைவனே

இதுதான் உம் இயல்பு எனில் எம்மிடத்தில்வந்து
எவ்வாறு சொல்லாது போய்விட நினைத்தீர்
இருக்கின்றீர் என்று வாழ்ந்திருந்த எம்
இன்பத்தில் வேறெடுத்தீர்

அழுந்தும் போதுதனில் அண்டவன் வருவானென்ற
அறத்தினை மறந்துகொண்டு ஏன் நின்றீர்
அங்கிங்கு தேடிக் களைத்த அன்பனுக்கு
ஆதாரம் சொல்ல வந்தீர்

ஆத்திகன் அறிவுக்கு அப்பாலே நின்றுகொண்டு
ஆண்டவன் செய்வது அடுக்குமன்றோ
அகப்பட்டுக் கொள்ளல் ஆகாது
ஆத்திகனுக்கு என்பதாலா

## எந்தை நீயென நமன்றமர் நலியின்

ஒவ்வொர்க்கு ஒரு தேதி ஒன்றாக ஒதுக்கிவிட்டு
ஒருநாளும் தவறாமல் எருதில் வரவழைப்பான்
ஒருபோதும் இசைவதில்லை கொடுத்திட
ஒப்பாரி செய்தே நிற்க

ஆறில் வந்தபோது ஆற்றாமல் ஆற்றிடவும்
ஆகும் விதியென்று ஆறிநின்றோம்
அறிந்திடா வயதினில் அப்படிச்
சென்றுவிட்டுப் போக

அறுபதில் வந்தபோது அப்பொழுதும் அழுதிடவும்
அனுபவித்த வயதென்று ஒரு உண்மைதனைச்
உரைத்திடவும் உளத்தை ஆறவிட்டு
உதிரத்தில் நான்

எப்போ எமன் வந்தால் எம் இதயம் தாங்கிவிடும்
எள்ளளவும் எண்ணாது கொடுத்துவிடும்
எடுத்த வேடமும் முடிக்கவேண்டி
எண்ணிவிட்டால் ஏது

கண்டுணரும் பொருட்களெல்லாம் கதிகலக்கி எடுத்திடவும்
வந்தமர்ந்த வீடு இது வாடகைக்குத் தந்தான்
வாங்கவொரு வீடுவேண்டின் வாழ்வில்
வல்வினைகள் செய்ய

வரவேற்றுப் பெற்றிடவும் வாழ்த்துக்கள் வழங்கிடவும்
வழக்காகப் பலபொருளும் விளங்கவுண்டு
வருவோர் போவோர்க்கு வாரியே
வழங்கிச் சேர்த்த விதி

என்னையும் கொண்டு செல்ல ஒரு நாள்வருவார்
எமனென்றும் பெயர்கொண்ட தர்மத்தலைவன்
அவனுக்குத் தப்பிவிட இடமேதும்
ஆண்டவன் தரவில்லை

உயிரைத் தருவதற்குப் பயமில்லை எனக்கு என்றும்
இன்றுவிட்டால் என்றாவது போகச் செய்யும்
உணரும்போதிலே உன் செயலாய்
உதவவேண்டும் அதுபோலே

## மூர்க்கரோடு முயல்வேனை

விடியலில் முன்னாக கண்விழித்தெழுந்த மனையாளவள்
விழிக்கும் அவன் முன்னாலே விரைந்து வந்துநின்றால்
வியளம் சரியில்லை விடியலின் போதினிலென்று
வேண்டும் வேறொரு நாளென்று சொன்னான்

முணுமுணுப்புடன் முகம் சுழித்தெழுந்து
முகம் கழுவும் முன்னாலே விரைந்து
முகத்தின் நிறங்காட்ட முன்னே
முழுவதும் தெரியக்கண்ணில்

தெருவில் இறங்கும்போது
தெரிந்த முகம் அவர்க்கு
தராதஇன்பம் தந்து
தெளிவாக்கியது

இருந்தபோதும்
அவர் நாள்
விளங்காது
அன்று

கடவுள்
காத்திடுவார்
கடுங்கொள்கை
கொண்டவராலும்

கண்கள் காட்சியைக்
கருத்துடன் காட்டிடினும்
கடவுளின் பக்கம் சென்று
கணக்குடன் பார்த்துநிற்கும்

கதியைக் கலங்க வைத்திடவே
கிரகங்கள் ஒன்பது கணக்கு வைக்கும்
கடவுளை நம்பினால் கைவிடப்பட்டு விடார்
எனில் கிரகத்தின் பார்வைகள் கிரமமாகுமோ

கிளர்ந்தெழும் பகைக்கெல்லாம் காரணம் சொல்ல
கிரகத்தின் அருகாமை வழக்கமெனக் கொள்வதுவா
தங்களுக்குள் குழப்பிடாத ஒழுக்குகளிற் சுற்றி வரும்
தளைக்காத சேவையிற் குறையொன்றைக் காண்பதுண்டா

மூக்கிற் தூசுபோக
முடியாமற் தும்மிவிடும்
முன்னால் யாரும் பார்த்தால்
மூண்டுவிடும் சனி

வெண்ணிற ஆடை
கைம்பெண் காணவரின்
வெற்றியின் கைமாறும் என்று
வீணாக உரை

வீடு அமைத்திட
விதண்டாவாதங்கள் பல
வெளியும் வாசலும் செய்ய
விரும்பாத அமைப்பு

விருந்தாளி உபசரிப்பு
வேண்டாத கிழமை
வில்லங்கம் வருமெனக் காட்டி
விரும்பாத விருந்து

கூரைக்கு மேலிருக்கும்
பல்லிக்குப் பசியெடுத்தால்
கூடாதுசெயல் தொடக்கம் எனக்
கூசாமல் சொல்லிடுவார்

பூனை வரும்வழியில்
பூடமாய்க் குறுக்கிட்டால்
போதாத காலம் என்று போக்கினில்
போட்டு விடுவார்

நாய்கள் சேர்ந்துவந்து
நாக்குளற கத்தும்போது
பேயே வந்ததுபோல் பிதற்றிவிடும்
பித்தராக வரும்

அஞ்சாத நேரமில்லை
அஞ்சுதற்குக் காரணமில்லை
அஞ்சி ஒடுங்கி அடங்கவென்று
மூர்க்கரோடு

## அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே

வயிற்றின் வலியது உடலில் உணர்த்திட
வாட்டம் போக்குவதற்கு வந்தருள வேண்டுமென்று
வழிமேல் விழிவைத்துக் காத்திருக்க
வாராத நீ

அவரவர் வயிறாக அவரே நினைத்து
அற்றார் அழிபசி தீர்த்து அவனவன் பெற்ற
பொருள் வைப்புழியெனும் பேற்றை
பொருத்தவன் தெய்வம்

உடல் முழுதும் வியாபித்து இருக்கும்
உயிரை எடுத்திட ஒவ்வொன்றாய் முளைத்தெழும்பும்
ஒரு வியாதி வலிபொறுக்காது
வேண்டி நின்று தீரா

நோய்க்கு மருந்தாக நினைந்து செயற்படாது
நோவின் வலியினைக் குறைத்து நினைவிழக்கவிடும்
வலியின் சுமையகற்றும் வைத்தியன்
வந்திடும் தெய்வம்

ஆப்பிழுத்த குரங்காக ஆபத்தைக் கவர்ந்து
அறிவையும் கட்டிவிட அவனழுது மனம் சோர்ந்தால்
ஆண்டவனே உன்னை அழைத்திடவும்
ஆபத்பாந்தவராய்

ஆனாலும் நீ வர நெடுநேரம் எடுத்திடவே
அக்கினியாய் வெளிவந்து அவனைத் தந்திட்டால்
அவனுக்கு ஓரிடம் வரலாற்றில்
அமைத்திடவும்

இல்லாமை என்பது இல்லாததாகி நின்றபோது
அறியாமை எனபதையே அடுக்கடுக்காய்ச் சேர்த்திட்டேன்
இருட்டில் நடந்து செல்லும்வேளையில்
இல்லாத நீ

அறிவாய் நின்று அணைத்திடுவன்
அறிவில்லாமலும் அறிவுரை சொல்வான்
ஆறுதல் தன்னைக் கொடுத்துவிடும்
அவனே தெய்வம்

அழைத்து நிற்கும் பொழுதில் ஓர்
அன்புக்கரங்களை நீட்டிவிடாது நீயும் தானோ
அடிப்பது போன்று செய்வதானால்
அவன் நீயாக

## ஆலிலை எம்பெருமான்

நல்லது சொல்லி நன்மையைச் செய்ய
நான் நினைத்தபோதும் நட்புரிமை தந்திடாமல்
நன்மையே கொடுமையாய் பார்க்கும்
நம்மவர் பலர்

நன்றாகும் என்று நான் சொல்லும்போது
நகைத்திட வென்று நாட்கணக்கில் கதைத்திருந்த
நல்லவர்களுக்கு எல்லாம் நான்
நகைப்புக்காகி

பற்றாக்குறைகளுக்கு பதம் சொல்லி
பழையனவற்றைப் பாகுபட சிந்தித்து ஒழுகி
பரம்பரை தரும் பாடமறிந்திட
பாடது படுகின்றேன்

புதியதைப் புகுத்திடப் புதுக்கதைகள்
புண்ணியமாக்கிடப் பற்பல சொல்லும் பதர்கள்
பலரினைக் கண்டு சோர்ந்திடினும்
சேர்ந்திடா ஆளாய்

இவ்விடத்தில் இருக்கும் எவற்றுக்கும்
இன்னின்னது செய்தால் இவ்வாறு இருக்குமென்று
சொல்லிக் கேட்டினும் செயலில் காட்டிட
ஆளிலை எம்பெருமான்

நீ செய்த வேதம் நீட்டிநிலைத்து
நீயாக வந்து நினைப்போர்க்கு உரைத்திட்டால்
நீட்டித்துப் பயன்தரும் உன்னை
அழைத்திட ஆளில்லை

வாராதிருக்கும்போது வகையாகவைத்து
வந்து இயங்கவென்று அழைத்தால் வருவதில்லை
வா என்று உனக்குத் தூதுரைக்க
ஆட்களில்லை

அழைக்க ஆளில்லை வர விரும்பவில்லை
ஆனாலும் அழைத்ததிலே எமக்கும் வாய் ஓய்வதில்லை
ஆளாக அழைத்திருந்தேன் ஆண்டவனே
ஆயின் ஆளாயில்லை

# அதுவோ உனதின்னருள்

அதனால் நான் ஆத்திகன்..

அசைவதில் எல்லாம் அவன்தான் என்று
அலைக்கும் கலைக்கும் அருளைக் கண்டவன்
ஆழத் தேடி அலைவதைக் கொண்டவன்
அதனாலே நான் ஆத்திகன்

அன்பு பெருகும் இடத்தில் எல்லாம்
அன்பைக் கொண்ட பண்பைக் காட்டுவான்
அவனே அன்பன் என்பதாய்ப் பிதற்றி
வந்ததனால் நான் அத்திகன்

பள்ளம் குழியுடன் பாதையிற் சென்றும்
பரமன் பாதத்தை அடையவதாய்ச் சொன்னவுன்
படுகுழியில் தள்ளிப் பலர் செய்தபோது
பண்பாய் எழுந்தவன் நான்

விதியில் மதியை வென்றிட வந்தும்
வென்றிட்ட மதியையும் வினையெனச் சொல்லி
விதண்டா வழக்கினர் பலரைக் கண்டும்
விளங்கா நிற்கும் சமர்த்தனன்.

உந்தன் படைப்பே இவனெனச்சொல்லி
உழன்று சுழன்று பிறந்து மாய்ந்தெழுந்தும்
ஒன்றும் அறியாப் பிள்ளையாய்
உட்கார்ந்திட்ட அவன்

தானாய்த் தடக்கித் தவழ்ந்தெழுந்து
தளரா முயற்சியுடன் எதிர்நடை போட்டவன்
எவ்வாறாயினும் சிரிப்பவன்
எனினும் அவன் மனிதன்

தனக்குக் கிடைப்பதைத் தந்ததென்று
தானாய் நிமிர்ந்து தளிர்நடை நடந்தவன்
தயக்கமின்றிச் சொல்பவன்
தானோர் ஆத்திகன்

ஆள்வது நீயென அறிவதால்
ஆண்டவா நீ வாவென உரைப்பதால்
அகப்படாது நீ வாழ்கின்றாய்
ஆத்திகன் பார்க்க

## ஆறாத இன்பம் அருளும் மலை

அவனவன் செய்வினை அதற்கு எல்லாம்
ஆறாது அருட்கொடுக்கும் அண்ணல் அவனே
ஆயினும் அதுவொன்றும் நடந்திடாது
அங்காக இங்காக அலைந்திடவும்

ஒருவர்க்கும் உதவிடாது ஒருவன் இருந்து
ஒன்றுக்கும் உதவாதது செய்து வந்தான்
ஒருவர்க்கும் பிடிக்காதாய் அவனின் செய்கை
துளிக்கும் நன்மையிலான்

அவனோ விரும்பியது நிறைவுபெறும்
அவனின் கரங்களெல்லாம் பொன்நிறையும்
அவனின் இல்லத்தில் அருள்நிறையும்
அமைந்த பலதுமே அருள்சுரக்கும்

நல்லவன் வாழ்க்கையது நாறிவிடும்
நன்மைக்குக் காலமில்லாதாகிவிடும்
நாடும் பொருந்தும் நல்லதெல்லாம்
நாடாது அவன்மனது வாழ்ந்து கொள்ளும்

அவர்க்கு அனுபவிக்க இங்கில்லை என்று
அங்கெல்லாம் ஒரு வாழ்வு சொல்லப்படும்
ஆனாலும் வலியனைத்தும் வந்துவிடும்
வேறிடத்தில் போட்டிடாது

எங்கோ எப்போது வாழ்வதற்கு
இங்கே இப்போது செய்வதென்ன வேண்டும்
எப்படியும் வாழ்ந்து முடித்திடலாம்
என்று நினைப்பான்

எதிலும் அலட்டிடாமல் அவன்
ஏறெடுத்தும் பாராதும் எழுந்து ஓடுவதால்
ஏறிட்டும் பார்ப்பதில்லை எம்பிரானே
எல்லாம் நீயென்று

ஆண்டவன் பார்ப்பதென அவனுணர்வான்
அகப்படாது அவனிடத்தில் எட்டிப் போவாய்
ஆனாலும் அவன் ஆத்திகன்
அகப்படாது ஒருவனாய்

## தொழுவார்க்கொரு தீங்கில்லையே

உன்னை வணங்குவது போதுமா
உள்ளத்தால் உயர்ந்தொழுக வேண்டாமா?
ஒப்புரவு அறிந்திடலாகாதா
ஒரு நாளும் நிறைவாக வாராதா

உலகத்தோர்க் கெல்லாம் பொய்த்து நின்று
உண்மைக்குப் புறம்பாகப் பலவும் செய்து
உன்னிடம் வரும்போது உத்தமனாய்
ஒருவாறு வந்து சேர்ந்தால் ஆகிடுமா

களவு ஒரு பாதகம் என்று சொல்லியதால்
கருத்தினில் சென்றிடாமல் களவு செய்து
கடவுளுக்கும் ஒரு பங்கு தருவதனால்
களவென்பது பாவமில்லை என்றாகுமா

குருவாக நினைப்பதால் அவரெல்லாம்
கடவுளுக்கு மேலுள்ளார் ஆகிடுமா?
குருவாக அவர் சொன்னால் செல்வதுவா
குணமாக எதையேனும் செய்யாமல்

உந்தன் பெயரைச் சொல்பவர்
உன்னை உணர்ந்திட வேண்டாமா
உள்ளம் அறிந்து திரிவுபட்டு
ஒவ்வொன்றாகச் சொல்வதுவா

கடமை தன்னைக் கைக்கொண்டோன்
காட்டும் செயலோ ஒரு வழியில்
கருதிப் பலனைக் கொள்ளாது
கண்ணியமாகச் சென்றுவரும்

தொழுதல், தோன்றல் அவையெல்லாம்
தொட்டும் பாரார் அவருள்ளார்
கடவுள் பெயரைக் கருதிட்டால்
கணக்கில் எடுத்தும் பார்த்துவிடார்

வணங்கி நின்று கடவுளையே
வருந்திப்பார்க்கும் அவர்க்குள்ளும்
வாழும் வழியைக் கண்டறியார்
ஆத்திகனாக ஆகிவிட்டார்

## இன்பநிலை தானே வந்தெய்தும்

தாளாத வறுமையில் தலையும் துவழும்
தட்டிலே போட்டெடுத்த அன்னம்
கையைத் தொடும்போது
கவனம் வரும்

தனிமையில் வருத்தமாய் பலதும் வரும்
தானாக உணர்கையில் இனிமையாக
தவிக்கும் மனதும்
தவழ்ந்திடும்

அறிந்தும் அறியாதிருக்கும் பொருட்டும்
அவனாக உணர்ந்துவரும்
அகத்திலே இருள்
அசைந்திட

பெற்ற செல்வமெல்லாம் பிறர்க்காகும்
பொருளை இழந்தபின்பும்
பொறுமை சேர்க்கும்
சிறுமை

ஆற்றாது கொடுமைக்குள் ஆர்த்தெழும்
அதையெல்லாம் தாங்கும் மனது
அவர்க்காகும் போதில்
அலறும்

அகத்தினில் இருட்டில்லாமல் ஏற்றிவிடும்
ஆற்றாமையால் அவதியுறும்
ஆனாலும் இன்பமாகும்
இல்லாமை

இருட்டினில் வெளிச்சமும் இல்லாதனவும்
இல்லாததை இணைத்துவிட
இவனுக்கும் ஆகும்
இருப்பவையே

துன்பத்தில் இன்பமும் தொடராகவரும்
தொலைத்திட வேண்டாதது
தொகையாய் தோன்றும்
இன்பநிலை

## எண்ணும் பொழுது எளிது எய்த

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கவென்று
கருதும் பொழுதினில் கலையாய் வந்துசேர
கஷ்ரப்படாமல் அடையவேண்டும்
கல்வியில் நான்

படித்த படிப்புக்கு ஏற்றதாய் பதவிகள்
பழுதில்லாமல் வழங்கிவிட வேண்டும்
பகட்டாக எல்லாம் அமைய
பலதும் செய்ய

வேண்டும் பொருளெல்லாம் தோளுக்கு மேல்
வியர்த்து விழுந்திடாது வரவேண்டும்
பண்டங்கள் பலதந்தும்
பண்பாக

இல்லறத்து ஏற்றவளாய் இல்லாள் அவளும்
இன்முகத்துடன் மகிழ்ந்து வரவேண்டும்
இன்னாததேதும் வாழ்வில்
இல்லையென

மனையின்பால் மக்கட்பேறு மனம்போன்று
மாட்சிமையுடன் அமைதல் வேண்டும்
மண்ணில் வாழ்பவர்க்கெல்லாம்
மன்னுதாரணம்

பொருந்திவரும் பெருமையான கதைகள் எல்லாம்
புகழ்ச்சியைத் தனதாக்க வேண்டும்
அங்கதம் என்று ஆகாத
அரிய செயல்

ஆத்திகன் ஆகவே உன்மீது அகவல் பாடி
அருளைப் பெற்று ஆள்வதாய்
ஆண்டவன் பக்தியாக
அருளவேண்டும்

அனைத்தும் நிறைந்து அகத்தில் எழுந்து
அனுபவித்து மனம் அறியவேண்டி
அமைதியாய் வந்திடவும்
அவன் முடிவு

## நேயத்தே நின்ற நிமலன்

ஆத்திகனாய் நோக்குகின்றேன் ஆண்டவனே உன்னை
அற்புதமாய்ப் படைத்திட்டவனே என்னை
அழகுள்ள உடல் ஒன்றினிலே
அனைத்தும் கொண்டு

வன்மையாக எலும்புகள் பலவற்றைக் கொண்டு
வளமான இடத்திலெல்லாம் வைத்த
மூளை, இதயம், சிறுநீரகம்
பாதுகாப்பாய்

எலும்புக்கு உடையாக்கத் தசைகள் செய்து
எல்லார்க்கும் அழகுசேர்த்து எடுத்து
தளிருடல் ஆனது நார்களால்
இணைத்தெடுத்து

அங்கென்றும் இங்கென்றும் போடவில்லை என்னை
அற்புதமாய்க் கருவறைக்குள் வைத்தெடுத்து
அன்னை, தந்தையரின் அணைப்பில்
அரவணைக்க

ஆடிடவும் பாடிடவும் அழகாக அசைந்திடவும்
அலையெனவே வளைந்திருக்கும்
அங்கங்களின் அசைவுகள்
அழகாகவும்

அதற்கு ஓர் வருத்தம் ஆனதெனில் அதுவாக
ஆனதுபோல் மாறிடவும் ஆளாக
பொருள் எதிரியாக
உடலில்

அழியாத மனத்தில் என்றும் அழிந்திடாத எண்ண
அலைகளைச் சுமந்துவரும் அற்புத
இதயமே ஆகிவிட்ட
இருப்பு

நெருங்கி எனைக்காக்க நேயனாய் வந்து
நானாக நின்றிருக்க உணரும்
நட்புள்ள நல்லவா
நேயத்துடன்

## இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே

இன்னமும் ஆகவென்று வந்துசேர்ந்த
இன்பங்கள் பலவற்றைக் கடந்துவந்தேன்
இனிக்கும் மனதில் தேனாக
இனிமை

போதும் போதும் ஆகவென்று
பொல்லாத துன்பங்கள் பலவென்றேன்
போனால் போகட்டும் என்று
போகவிட்டேன்

ஆட்டும்போதில் ஆடிவந்தேன்
ஆடாத ஆட்டமெல்லாம் ஆட்டும் அவன்
ஆட்ட நாயகனாக
அப்பொழுதில்

ஆடியடங்கி அமரும்போது
ஆற்றாமல் தோற்றாமல் அடங்கிநின்றேன்
அமர்ந்தபோது அறிவில்லை
அடக்கமானேன்

வினைகள் தொடர்ந்திடலாகுமென்று
பிராப்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்பதாக
அவரவர் வினைக்கு அமைவாக
அமையுமோ வாழ்வு


விதியோ ஓடிவந்து பாய்ந்திடுமோ
அது மதியின் யூகத்தை மாற்றிடுமோ
விதியது விளையாடவென
வீணாவதோ பிறவி

பிறவியின் பாதை தொடர்ந்திடுமோ
அது இறந்திடாதஒரு நிலைக்கு ஆட்படுமோ
பெருங்கடலை நீந்திப்
பிறந்துவந்தோம்


ஆனாவன் ஆக அமைந்திடுவனோ
அவன் ஆத்திகனுக்குள் அடங்கி விடுவானோ
ஆனாலும் அகப்படாதவனே
ஆத்திகனுக்கு




## 2014






## 2015




## 2016










978-955-41614-9-X

விலை: ரூ.200.00

Vaani Computer Prinitng Centre, Vavuniya 024 2223658